## குளித்தலை நகராட்சி

16.11.2021.ஆம் தேதி புதன்கிழமை மாலை 5.00 மணிக்கு
நகராட்சி ஆணையர் அறையில் நடைபெற்ற அவசரக்கூட்டம்

ப.சுப்புராம்,
ஆணையர் மற்றும் தனி அலுவலர்,
குளித்தலை நகராட்சி.

-------

பொருள்– 01. குளித்தலை நகராட்சிக்கு கலைஞர் நகர்ப்புற திட்டம் (நகரம்) 2021–2022 மூலம் அரசு ஆணை எண்.92, நாள்–30.10.2021ல் சாலைப் பணிகள் செய்வதற்கு ரூ.172.03 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி வழங்கி உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. கீழ்க்குறிப்பிட்டுள்ளவாறு பணிகள் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண். | சாலையின் விபரம் | தொகை ரூ. (லட்சத்தில்) |
|---|---|---|
| | 1) **தார்சாலை பணிகள்–** | |
| 1) | மணத்தட்டை மேலக்குடித்தெருவில் தார்சாலை அமைக்கும் பணி | 2.19 |
| 2) | மணத்தட்டை மேலக்குடித்தெரு–1ல் தார்சாலை அமைக்கும் பணி | 5.10 |
| 3) | டைமண்ட் சிட்டியில் தார்சாலை அமைத்தல் | 20.55 |
| 4) | டைமண்ட் சிட்டி குறுக்குத்தெருவில் தார்சாலை அமைத்தல் | 5.20 |
| 5) | அம்மன் தெருவில் தார்சாலை அமைத்தல் | 13.15 |
| 6) | பாலாஜிநகர் பகுதியில் தார்சாலை அமைக்கும் பணி | 11.50 |
| 7) | பெரியார்நகர்–1 பகுதியில் தார்சாலை அமைக்கும் பணி | 2.95 |
| 8) | பெரியார்நகர்–2 பகுதியில் தார்சாலை அமைக்கும் பணி | 2.35 |
| 9) | பெரியார்நகர்–3 பகுதியில் தார்சாலை அமைக்கும் பணி | 8.30 |
| 10) | பெரியார்நகர்–4 பகுதியில் தார்சாலை அமைக்கும் பணி | 3.20 |
| 11) | மணிசேகர் நகர் பகுதியில் தார்சாலை அமைக்கும் பணி | 13.87 |
| 12) | பெரியபாலம்தெரு–1 பகுதியில் தார்சாலை அமைக்கும் பணி | 11.50 |
| 13) | பெரியபாலம்தெரு–2 பகுதியில் தார்சாலை அமைக்கும் பணி | 4.95 |
| 14) | பெரியபாலம்தெரு–3 பகுதியில் தார்சாலை அமைக்கும் பணி | 7.80 |
| 15) | சக்திநகர்–1 பகுதியில் தார்சாலை அமைக்கும் பணி | 6.20 |
| 16) | சக்திநகர்–2 பகுதியில் தார்சாலை அமைக்கும் பணி | 7.30 |
| 17) | சக்திநகர்–3 பகுதியில் தார்சாலை அமைக்கும் பணி | 7.35 |
| 18) | அண்ணாநகர் 7வது குறுக்குத்தெருவில் தார்சாலை அமைக்கும் பணி | 2.14 |
| | மொத்தம் | 135.60 |
| | 2) **பேவர் பிளாக் சாலைகள் அமைக்கும் தெருக்கள்–** | |
| 1) | வைகைநல்லூர் அக்ரஹாராம் 2ஆம் பகுதி குறுக்குத்தெரு | 1.68 |
| 2) | டைமண்ட் சிட்டி குறுக்குத்தெரு | 6.50 |
| 3) | வைகைநல்லூர் அக்ரஹாரம் 1ஆம் பகுதி குறுக்குத்தெரு | 3.73 |
| 4) | வைகைநல்லூர் அக்ரஹாரம் 1ஆம் பகுதி குறுக்குத்தெரு–2 | 3.33 |
| 5) | சபாபதிநாடார்தெரு | 3.77 |
| 6) | புதுக்கோர்ட்தெரு | 1.40 |
| 7) | மணிசேகர்நகர் குறுக்குத்தெரு | 5.40 |
| 8) | மலையப்பநகர் குறுக்குத்தெரு | 1.58 |
| 9) | மலையப்பநகர் குறுக்குத்தெரு–2 | 6.20 |
| 10) | டோமினிக் பள்ளிதெரு | 2.84 |
| | மொத்தம் | 36.43 |

| | | |
|---|---|---|
| 1) | தார்சாலை பணிகள் | 135.60 |
| 2) | பேவர் பிளாக் சாலை பணிகள் | 36.43 |
| | மொத்தம் | 172.03 |

அலுவலக குறிப்பு– மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.1574/2021/இ1)

பொருள்– 02. குளித்தலை நகராட்சியில் இன்றைய தேதிவரை நவீன மயானம் இல்லாததால் கலைஞர் நகர்ப்புற அபிவிருத்தி திட்டத்தின்மூலம் அரசு ஆணை எண்.92, நாள்–30.10.2021ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு ரூ.150.00 இலட்சத்திற்கு (ரூபாய் நூற்று ஐம்பது லட்சம் மட்டும்) நிதி வழங்கவும் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. மேற்கண்ட திட்டத்தின்மூலம் நகராட்சிக்கு சொந்தமான இடத்தில் நவீன மயானம் அமைக்க மன்றத்தின அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு– அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.1845/2021/இ1)

பொருள்– 03. குளித்தலை நகராட்சிக்கு 15வது நிதிக்குழு திட்டத்தின்கீழ் 2020–2021 மற்றும் 2021–2022ஆம் ஆண்டிற்கு (15th CFC Tied Grant and Untied Grant) நகராட்சியில் மேற்கொள்ளப்பட வேண்டிய பணிகளுக்கு அனுமதி வழங்கவேண்டியும் மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.21191/AMRUT2 நாள்–25.10.2021ல் கீழ்க்கண்டவாறு ஒதுக்கப்பட்ட 15வது நிதிக்குழு திட்டத்தின்கீழ் குறிப்பிட்ட பணிகள் மேற்கொள்ள அறிவுறுத்தியதின்பேரில், உள்ளாட்சி பகுதிகளில் உள்ள மக்கள் தொகையின் அடிப்படையில் இரண்டு வகைகளாக பிரித்து பொதுமக்களின் பயன்பாட்டிற்காக மேற்கொள்ளப்பட உள்ள குடிநீர் பணிகள், திடக்கழிவு மேலாண்மை பணிகள், மழைநீர் வடிகால், சிறுபாலம் கட்டுதல் மற்றும் இதர பராமரிப்பு பணிகள் செய்வதற்கு அனுமதி வேண்டியும், அதற்கான உத்தேச செலவினம் ரூ.236.50 லட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண். | விபரம் | தொகை ரூ.(லட்சத்தில்) |
|---|---|---|
| 1) | 2020–2021.ஆம் ஆண்டு Tied and Untied | 136.50 |
| 2) | 2021–2022.ஆம் ஆண்டு Tied and Untied | 100.00 |
| | மொத்தம் | 236.50 |

அலுவலக குறிப்பு– மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.1845/2021/இ1)

பொருள்– 04. குளித்தலை நகராட்சிக்கு நகர்ப்புற ஏழைகளின் வாழ்வாதாரத்தை உயர்த்தும் நகர்ப்புற வேலைவாய்ப்புத் திட்ட என்ற திட்டத்தில் ஏழு மண்டலங்களில் தலா ஒரு மண்டலத்துக்கு ஒரு நகராட்சி வீதம் தேர்வு செய்யப்பட்டதில், குளித்தலை நகராட்சி மேற்படி திட்டத்தில் இடம் பெற்றுள்ளது. அதனை தொடர்ந்து, அரசு ஆணை எண்.96, நாள்–02.11.2021ம் நாளிட்ட கடிதத்தில் திட்ட நிதி ஒதுக்கீடு செய்து உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. அதற்கு கீழ்க்கண்ட விவரப்படி பணிகள் தேர்வு செய்யப்பட்டுள்ளது.

| வ. எண். | பணிகள் விபரம் | ரூ. லட்சத்தில் |
|---|---|---|
| 1) | சத்தியமங்கலம் குப்பை கிடங்கில் மியாவாக்கி மரம் வளர்க்கும் திட்டம் | 25.00 |
| 2) | பெரியார்நகர், ஜெய்மஹால் அவென்யூ, பாலாஜிநகர், அண்ணாநகர் ஆகிய பூங்காவில் மரம் நடும் திட்டம் | 10.00 |
| 3) | பெரியார்நகர் பூங்காவை மேம்படுத்தும் பணி | 45.00 |
| 4) | அண்ணாநகர் பூங்காவை மேம்படுத்தும் பணி | 25.00 |
| 5) | டவுன்ஹால்தெரு மற்றும் அண்ணாநகர் பிள்ளையார்கோவில் தெருவில் மழைநீர் வடிகால் கட்டும் பணி | 25.00 |
| 6) | பள்ளிவாசல் தெருவில் மழைநீர் வடிகாலில் மண் அப்புறப்படுத்தும் பணி | 30.00 |
| 7) | காவேரிநகர் சாலையில் மழைநீர் வடிகால் அமைக்கும் பணி | 40.00 |
| | மொத்தம் | 200.00 |

மேற்கண்ட பணிகளுக்கு அதன் எதிரே குறிப்பிட்ட தொகைக்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு– மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.1574/2021/இ1)

பொருள்– 05. குளித்தலை நகராட்சி 24 வார்டு பகுதிகளிலும் உள்ள பொதுமக்களுக்கு குளோரினேசன் செய்யப்பட்டு சுகாதாரமான முறையில் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. இப்பணியில் அவ்வப்போது குழாய் உடைந்தால் சரிசெய்வது, குடிநீர் சேகரிப்பு நிலைய மோட்டார் இயக்குதல், மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியிலிருந்து குடிநீர் விநியோகம், குடிநீர் தொட்டிகளை அவ்வப்போது சுத்தம் செய்தல் மற்றும் இதர பணிகளை மேற்கொள்ள போதிய பணியாளர்கள் இல்லாத காரணத்தால், நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.21787/2021/இஏ–2, நாள்–02.10.2021ல் வழங்கியுள்ள வழிமுறைகளுக்கிணங்க, வெளிக்கொணர்வு முகமை மூலம் ஒப்பந்த அடிப்படையில் பணியாளர்களை அமர்த்தி பணி மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவினம் ரூ.22,000,00/–க்கு, மன்ற தீர்மானம் எண்.249, நாள்–11.10.2021இல் அனுமதிக்கப்பட்டு, நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டது. நகராட்சி நிர்வாக இயக்குநர் அலுவலகத்தின் கூர்ந்தாய்வில், தற்போது தேவைப்படும் பணியாளர்களுக்கேற்ப திருத்திய மதிப்பீட்டில் பிரேரணை சமர்ப்பிக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதன்பேரில் தற்போது திருத்திய மதிப்பீடு ஒரு வருடத்திற்கு ரூ.4295000/–க்கும் (ரூபாய் நாற்பத்து இரண்டு லட்சத்து தொண்ணூற்று ஐந்து ஆயிரம் மட்டும்), அதற்கான நிர்வாக அனுமதி வேண்டி, கருத்துருவை நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு அனுப்பி வைக்கவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு– 1). மன்றம் அனுமதிக்கலாம்.
2). மேற்கண்ட செலவினத்தை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.1680/2021/இ1)

பொருள்– 06. குளித்தலை நகராட்சி 24 வார்டு பகுதிகளிலும் உருவாகும் குப்பைகளை பொது சுகாதாரப் பிரிவு பணியாளர்கள் மூலம் சேகரம் செய்து, மக்கும் குப்பை மற்றும் மக்காத குப்பை என பிரித்து உரக்கிடங்கிற்கு அனுப்பி வைக்கும் பணி, கழிவுநீர் தேங்காவண்ணம் மழைநீர் வடிகால் சுத்தம் செய்யும் பணி மற்றும் இதர சுகாதார பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இப்பணிக்கு போதிய பணியாளர்கள் இல்லாத காரணத்தால், நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.21787/2021/இஏ–2, நாள்–02.10.2021ல் வழங்கியுள்ள வழிமுறைகளுக்கிணங்க, வெளிக்கொணர்வு முகமை மூலம் ஒப்பந்த அடிப்படையில் பணியாளர்களை அமர்த்தி பணி மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவினம் ரூ.1,48,000,00/–க்கு (ரூபாய் ஒரு கோடியே நாற்பத்து எட்டு லட்சம் மட்டும்), மன்ற தீர்மானம் எண்.250, நாள்–11.10.2021இல் அனுமதிக்கப்பட்டு, நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டது. நகராட்சி நிர்வாக இயக்குநர் அலுவலகத்தின் கூர்ந்தாய்வில், தற்போது தேவைப்படும் பணியாளர்களுக்கேற்ப திருத்திய மதிப்பீட்டில் பிரேரணை சமர்ப்பிக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதன்பேரில் தற்போது திருத்திய மதிப்பீடு ஒருவருடத்திற்கு ரூ.1,22,60,000/–க்கும் (ரூபாய் ஒரு கோடியே இருபத்து இரண்டு லட்சத்து அறுபதாயிரம் மட்டும்) அதற்கான நிர்வாக அனுமதி வேண்டி, கருத்துருவை நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு அனுப்பி வைக்கவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு– 1). மன்றம் அனுமதிக்கலாம்.
2). மேற்கண்ட செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.1679/2021/எச்1)

பொருள்– 07. அரசாணை(ப) எண்.121, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மா.நா.1) துறை, நாள்– 17.01.2013 மற்றும் அரசாணை(நிலை) எண்.118, நாள்–26.09.2014.இன்படி, குளித்தலை நகராட்சி எல்லைக்குட்பட்ட அரசு மருத்துவமனை வளாகத்தில் அமைந்துள்ள அம்மா உணவகத்திற்கு தேவையான அத்தியாவசிய பொருட்கள், 2021–2022ஆம் ஆண்டுக்கு வாங்குவதற்கு, குளித்தலை நகராட்சி மன்ற தீர்மானம் எண்.179, நாள்–31.05.201.இல் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்கண்ட தீர்மானத்தில் மளிகை பொருட்களை கரூர் மாவட்ட மொத்த கூட்டுறவு நுகர்வோர் பண்டகசாலை, கரூர் நிறுவனத்தில் வாங்க அனுமதிக்கப்பட்டுள்ளது. இந்நிறுவனத்தால் விநியோகம் செய் யப்படும் பொருட்களின் தரம் சரியில்லாத காரணத்தால், அம்மா உணவகத்திற்கு தேவையான மளிகை பொருட்களை, சிந்தாமணி கூட்டுறவு சிறப்பங்காடி, குடோன், மதுரை ரோடு, பேலஸ் தியேட்டர் எதிர்புறம், திருச்சி என்ற நிறுவனத்தின்மூலம் வாங்கி பயன்படுத்திக்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு– மன்றம் அனுமதி வழங்கலாம்.
(ந.க.எண்.1083/2014/டி2)

*******

# குளித்தலை நகராட்சி

16.11.2021.ஆம் தேதியஅவசரக்கூட்டத் தீர்மானங்களின் உண்மைநகல்

| வ. எண். | பொருள் எண். | தீர்மானம் எண். | தீர்மான விபரம் |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1 | 1 | 266 | அனுமதிக்கப்பட்டது. |
| 2 | 2 | 267 | அனுமதிக்கப்பட்டது. |
| 3 | 3 | 268 | அனுமதிக்கப்பட்டது. |
| 4 | 4 | 269 | அனுமதிக்கப்பட்டது. |
| 5 | 5 | 270 | அனுமதி வழங்கப்பட்டது. |
| 6 | 6 | 271 | அனுமதி வழங்கப்பட்டது. |
| 7 | 7 | 272 | அனுமதி வழங்கப்பட்டது. |

ஒம்/—ப.சுப்புராம்,
ஆணையர் மற்றும் தனி அலுவலர்,
குளித்தலை நகராட்சி.

/ உண்மை நகல் /

ஆணையர்,
குளித்தலை நகராட்சி.